## கட்புலனற்றவர்களுக்கான புனர்வாழ்வு நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் - 2017

கட்புலனற்றவர்களுக்கான புனர்வாழ்வு நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவறான நிதி நிலைமை கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று மற்றும் தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுகளின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1992 இன் 09 ஆம் இலக்க பார்வை ஊனமுற்றோருக்கு புனர்வாழ்வளிக்கும் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சட்டத்தின் 9 (2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் ஆண்டிறிக்கையுடன் சேர்த்து பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகார சட்டத்தின் 13 (7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கை ஒன்று 2018 ஜூன் 06 ஆம் திகதி நிதியத்தின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுகளிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுபாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக் கூற்றுக்ககளின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும் . அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்வதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக் கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுபாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுபாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சம்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்காக தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2 நிதிக் கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை கட்புலனற்றவர்களுக்கான புனர்வாழ்வு நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையை அத் திகியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 3 நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளில் ரூபா 165,974 இற்கான மிகை ஒன்று காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 513,677 தொகை காணப்படாமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 679,651 இற்கான வளர்ச்சி ஒன்றினை காட்டியது. மீளாய்வாண்டின் போது கண் வில்லைகள் வழங்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் ரூப 1,012,500 இனால் குறைவடைதல் மேற்கூறிய வளர்ச்சிக்கு முக்கிம் தாக்கியிருந்தது.

## 4 செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

### 4.1 செயல் ஆற்றுகை மற்றும் மீளாய்வு

(அ) மீளாய்வாண்டின் போது 400 மாணவர்களுக்கான கல்வி மற்றும் பண்பாட்டு அலுவல்களுக்காக ரூபா 4,500,000 தொகை நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் லுவிபிரேல் மாணவ உதவி, உயர் தர மாணவர்களுக்கான மாணவஉதவி மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான மாணவஉதவிகள் என 261 மாணவர்களுக்கு மீளாய்வாண்டிற்காக உதவி நிதியாக வழங்கியிருந்தது ரூபா 2,090,000 தொகையாகும்.

மாணவர்களுக்கு மாணவஉதவி வழங்கும் போது கடந்த ஆண்டில் 06 மாதத்திற்கான கொடுப்பனவு தாமதித்திருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான ஏற்பாடுகளில் அதற்காக ரூபா 168,500 தொகை செலவிடப்பட்டிருந்தது. மாணவர்களுக்கு மாணவஉதவிகள் செலுத்தும் தாமதத்தை தவிர்த்துக் கொள்வதற்காக நிதியத்தினால் நடைமுறையொன்று கடைபிடித்திருக்கவில்லை.

(ஆ) புனர்வாழ்வு நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் 02 நிருவனங்களில் இருந்த 75 பார்வையற்ற மாணவர்களுக்கு பயிற்சி வழங்குவதற்கு திட்டமிட்டிருந்த போதிலும் 16 பார்வையற்ற மாணவர்களுக்கே பயிற்சி வழங்கப்பட்டிருந்தது. கடந்த 03 ஆண்டுகளிலும் 07 ஆலோசகர்களினாலும் அந்த 16 மாணவர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த எண்ணிக்கையில் அதிகரிப்பு ஒன்று மீளாய்வாண்டின் போது ஏற்பட்டிருக்கவில்லை.

(இ) கண் ஊனம் உடைய 75 நபர்களுக்கு கண் வில்லைகள் வழங்குவதற்காக ரூபா 1,090,000 தொகை நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் திருத்தப்பட்ட செயல் நடவடிக்கை திட்டத்தின் மூலம் அந்த ஏற்பாடுகளை ரூபா 300,000 தொகை வரையும் நபர்களை 20 பேர் வரையும் குறைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பார்வை ஊனமுற்ற நபர்களின் தேவைகளை இனங்கண்டு அவ் விடயங்களை முன்னேற்றுவது மேற்கொள்ளப்பட வேண்டும் எனினும் 16 நபர்களுக்கு மாத்திரம் கண் வில்லை வழங்குவதற்கு ரூபா 171,550 தொகை செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஏற்பாட்டுத் தொகையை உச்சமட்டத்தில் பயன்படுத்தியிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது விளையாட்டு திறமைகளை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 400,000 தொகை வழங்குவதற்காகத் திட்டமிட்டிருந்த போதிலும், ஒரு நிறுவனத்திற்காக ரூபா 190,250 தொகை மாத்திரம் பயன்படுத்தியிருந்தது. அதேபோல மீளாய்வாண்டின் போது மேலும் 03 நிறுவனங்களுக்காக விளையாட்டு உதவிகள் வழங்குவதற்கு நிதி ஏற்பாடு செய்திருந்த போதிலும் கணக்காய்வு திகதி ஆகிய 2018 ஜுலை 31 திகதி வரை உதவி நிதி ஏதும் வழங்கியிருக்கவில்லை.

(உ) சீதுவ தொழிற் பயிற்சி நிலையத்தின் பார்வை ஊனமுற்ற மகளிர் நிலையத்தினால் நடாத்தப்பட்டுவரும் புடவை நெசவு நிலையத்தின் உற்பத்திகளில் கடந்த 04 ஆண்டுகளின் போது நட்டமடைந்திருந்ததுடன் அந்த புடவை நெசவு நிலையத்தை முன்னேற்றுவதற்காக முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 1992 இன் 09 ஆம் இலக்க பார்வை ஊனமுற்றோருக்கு புனர் வாழ்வளிக்கும் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சட்டத்தின் பிரகாரம் நிதியத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய குறிக்கோள்களிடையே பார்வை ஊனமுற்றோருக்கு கலைப் பாடநெறிகளை கற்பதற்காக அல்லது தொழிற் பயிற்சி பெற்றுக் கொள்ளக் கூடிய விதமாக அவர்களுக்கு வீட்டு வசதிகள் வழங்குவதற்கு அவர்களினால் உற்பத்தி செய்யப்படும் பண்டங்களுக்காக விற்பனை வசதிகள் வழங்குவதற்கும் எதுவித கருமமும் நிறைவேற்றியிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது நடத்தப்பட முகாமைத்துவ சபைக் கூட்டத்தில் பார்வை ஊனமற்றவர்கள் மற்றும் அனைத்து ஊனமற்ற நபர்களின் எண்ணிக்கை தொடர்பாக தரவு அலகு ஒன்று பேணுதல் , பார்வை ஊனமுற்றோருகளின் சமூக பாதுகாப்பு திட்டமொன்று தயாரித்தல் பார்வை ஊனமுற்றோர்களில் குறைந்த வருமானத்தையுடையவர்களுக்கு ஓய்வூதிய திட்டம் ஒன்று ஏற்படுத்துதல் மற்றும் கல்வி பொதுத் தராதர சாதாரண தரம் மற்றும் உயர்தரம் கற்கும் கண்ஊனமுற்றோர் மாணவர்களுக்கு புலமை பரிசில்கள் வழங்குவதற்காக பிரேரனைகள் அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றுடன் தொடர்புடைய கருமங்கள் ஏதும் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 1992 இன் 09 ஆம் இலக்க பார்வை ஊனமுற்றோருக்கு புனர்வாழ்வளிக்கும் நம்பிக்கை பொறுப்பு நிதிய சட்டத்தின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் முகாமைத்துவம் மற்றும் நிருவாகம் 13 அங்கத்தவர்களை கொண்ட முகாமைத்துவ சபை ஒன்றிற்கு சாட்டப்பட்டிருந்த போதிலும் சபையின் இரண்டு அங்கத்தவர்கள் கடந்த 2 வருடங்களிலும் மற்றும் மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்ட முகாமைத்துவ சபை கூட்டங்கள் எதிலும் பங்குபற்றி இருக்கவில்லை.

## 5 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

---------------------------------------------------------------

### 5.1 நிதிக் கூற்றுக்கள் சமர்பித்தல்

---------------------------------------------------

2003 ஜுன் 02 திகதி பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள், நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும் நிதியத்தின் நிதிக் கூற்று 2018 ஏப்ரல் 03 ஆந் திகதி அன்றே சமர்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2 செயல்நடவடிக்கை திட்டம்

------------------------------------------------

செயல் நடவடிக்கை திட்டத்தை நிறைவேற்றும் முன்னேற்றம் காலத்திற்கு உகந்த விதமாக பரிசோதனை செய்வதற்காக நடைமுறை ஒன்று நிதியத்தினால் அறிமுகப்படுத்தியிருக்காததுடன் பல வருட காலமாக ஒரே செயற்பாடுகள் செயல் நடவடிக்கை திட்டத்தில் அடங்கியிருந்தது.

### 5.3 பாதீட்டு கட்டுபாடு

-----------------------------------

பாதீட்டு வருமானங்கள் செலவுகள், உள்ளவாறான வருமானங்கள் செலவுகள் உடன் இணக்கஞ் செய்த போது 8 சதவீதம் முதல் 52 சதவீதம் வரை வீச்சொன்றில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையானது பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டு கருவி ஒன்றாகப் பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---------------------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுபாட்டு குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. கீழ்வரும் கட்டுபாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுபாட்டு பரப்புகள் | அவதானிப்புகள் |
| --- | --- |
| (அ) நிகழ்ச்சி திட்ட நிருவாகம் | பார்வை ஊனமுற்ற நபர்களுக்கான புனர்வாழ்வு நிகழ்ச்சி திட்டத்தினை ஏற்பாடு செய்து செயற்படுத்தி யிருக்கவில்லை. |
| (ஆ) உதவிகள் வழங்குதல் | கல்வி விடயங்களுக்கான உதவிகள் வழங்குவதில் தாமதம் காணப்பட்டது. |